# சித்தர் நெறிகள்

தொகுதி




பதிப்பாசிரியர்

சற்குரு குருதேவ் மும்மாசெ
முனைவர் கலை. இராம. வெங்கடேசன்
முனைவர் மு.இராசேந்திரன்
முனைவர் நாஞ்சில் நீல. மாதவன்
முனைவர் சு. சதாசிவம்

...ந்தன மாசியப்ப செல்வராஜ், ஞானஒளியுட...
...வியல்துறை வெளியீடு, 2013.
... (பத்தாந் திருமுறை), சென்னை: அருள் க...
...தாம் திருமுறை-I, மயிலாடுதுறை: ஞானசம்பந்த...
...ட்டுச் சித்தர்கள், சென்னை: அன்னை அபிரா...
...பெருமைகம், சென்னை: சங்கர் பதிப்பகம், 1992.
...யோக நிலையும் சித்தர் பாடல்களின் பயன்பாடு...
...பற்றிய அறநூல் கருத்துக்கள்", ஆறாவ...
...பாண்டிச்சேரி தாகூர் அரசினர் கலைக்கல்லூரி...



# 109. சித்தர் தத்துவமும் சூஃபித் தத்துவமும்: ஓர் ஒப்பீடு

**கோவி. சிவபாலன்**
மலாயாப் பல்கலைக்கழகம்

**முன்னுரை**

இந்திய மண்ணில் பல்வேறு சமயங்களும் நம்பிக்கைகளும் தோன்றியுள்ளன. அவை ஒவ்வொன்றும் தனித்தச் சிறப்புக்குரியவையாக விளங்குகின்றன. தமிழகத்தில் ஆன்ம நெறி வளர்த்த பெரியோர்களுள் சித்தர்கள் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றனர். இச்சித்தர்கள் தங்கள் கருத்துகளைப் பாடல்களாகப் பாடி வைத்துள்ளன பொதுவாக சித்தர்களை இந்து சமயத்தோடு சார்த்திப் பார்ப்பதுவே பெரு வழக்காக இருந்து வருகின்றது. சித்தர் குலாத்துள் இருக்கக் கூடிய முஸ்லீம் சித்தர்களை (சூஃபி) பற்றிய பார்வை மக்களிடமும் ஆய்வாளர்களிடமும் சற்றுக் குறைவாகவே உள்ளது. தமிழ் முஸ்லீம் சித்தர்கள் படைத்துள்ள யோக, தத்துவப் பாடல்கள் எல்லாம் விலைமதிக்க முடியாத பெருஞ்செல்வங்களாக விளங்குகின்றன. தம் பாடல்களின் வழி தமிழ்ச் சமுதாயத்தின் ஆன்மத் தெளிவுக்கு அவர்கள் ஆற்றியுள்ள இலக்கியப் பணி போற்றுதற்குரியதாகும். தமிழ் நாட்டு நிலப்பரப்பில் இருந்துகொண்டு சித்தர்களும் சூஃபிகளும் செய்த ஆன்மீகப் பணி மிகப் பெரியதாகும். இவர்களது தத்துவங்கள் இந்து மற்றும் இஸ்லாம் சமயப் பின்னணியைக் கொண்டிருந்தாலும் இவர்களது நோக்கம் ஒன்றையே அடைவாகக் கொண்டுள்ளது. இரு வேறு சமயப் பின்னணியைக் கொண்ட இவ்விரு தத்துவங்களையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

**ஆய்வின் பின்னணி**

ஆத்ம ஞானம் என்பது மனித குலம் என்று தோன்றியதோ அன்று தொடங்கி அவனோடு இரண்டறக் கலந்து வந்திருக்கின்றது. ஆனால் இது இடம், காலம், சூழலுக்கேற்ப வேறுபட்டு வந்துள்ளது. ஆத்ம ஞானம் என்பது எச்சமயத்தவருக்கும் உரியது; எந்நாட்டவருக்கும் பொதுவானது. ஆனால், ஒவ்வொரு சமயத்தவரும் அவரவருடைய நெறிமுறைகளுக்கேற்ப ஆத்ம ஞானத்தை வளர்த்து வந்துள்ளனர். ஒவ்வொரு நாட்டவரும் அவரவரின் மனப்பான்மைக்கேற்ப ஆன்மீகத் தேடலுக்கு வழிகாட்டியுள்ளனர். இவர்களின் வழிவகைகள் வேறாக இருப்பினும் அனைவரது நோக்கமும் ஆன்மீகத் தேடலை மையமாகக் கொண்டே இருந்துள்ளது. எனவே, ஆத்ம ஞானம் என்பது உலகனைத்துக்கும் பொதுவானது என்னுங் கருத்து தெளிவாகிறது. ஆத்ம ஞானத்துக்கு வழிகாட்டிய பெரியோர்கள் ஆத்ம ஞானிகள் என அழைக்கப்பட்டனர். உலகனைத்துமுள்ள ஆத்ம ஞானிகளிடத்தில் இறையனுபவ நிலையைப் பெறுவதில் ஒரு பொதுமைத் தன்மை இருப்பதை நன்குணர முடிகின்றது. எப்படி உலகனைத்தும் உள்ள சமயக் கோட்பாடுகளில் நல்லனவற்றை நன்மை தருவன என இனங்காட்டுவதிலும்

## பொருளடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| உலகவாம் திரு ஊதுமுறை<br>முத்துக்கோத்தன மாரியப்ப செல்வராஜ் | 523 |
| ஊனுடம் உய்ய சித்தர் நெறி<br>மு. இராசேந்திரன் | 531 |
| பெரியபுராண அற்புதங்களும் சித்தர் நெறிகளும்<br>குமரன் இராமையா | 538 |
| திருமூலர் மற்றும் திருவள்ளுவர் பார்வையில் கள்ளுண்ணாமை<br>பரமேஸ்வரி கிருஷ்ணன் | 546 |
| சித்தர் தத்துவமும் சூஃபித் தத்துவமும்: ஓர் ஒப்பீடு<br>யோகி. சிவபாலன் | 553 |
| சித்தர்கள் காட்டும் ஆன்ம ஈடேற்றத்துக்கான தடைகள்<br>மணிமாறன் சுப்ரமணியம் | 560 |
| [illegible] தொலைக்காட்சித் தொடர் நாடகத்தில் சித்தர்கள் குறித்த எதிர்மறைக் கருத்துகள்<br>[illegible] கந்தசாமி | 567 |
| சித்தநெறி குறித்த மலேசியத் தமிழ் எழுத்துப் பதிவுகள் - ஒரு பார்வை<br>ஜெ. இந்துஜா ஜெயராமன் | 573 |
| சங்க இலக்கியமும் சித்தர்களும் காட்டும் தமிழர் இறைநெறி<br>ஜ. செல்வ சுப்ரமணியம் | 583 |
| சித்தநெறியில் சமுதாய சீரமைப்பு கூறுகள்<br>புனிதா சிவானந்தம் | 591 |
| திருமூலரின் சரீரத் தத்துவம்<br>க. சிவகுமார் | 597 |
| சிவவாக்கியரின் இறை உணர்வு<br>இரா. அருள்நிதி & பிரகாஷ்தாஸ் கு இராமதாஸ் | 602 |
| திருமூலரின் வாழ்வியல் நெறிகள்<br>க. இந்திரா | 605 |
| சித்தர் இலக்கியமும் ஆன்மீகமும்<br>வி. சங்கர நாராயணன் | 609 |
| திருமூலர் காட்டும் வாழ்வியல் நெறிகள்<br>க. சித்ரா | 612 |
| பட்டினத்தார் பாடலில் உவமை<br>உ. சிவசுப்பிரமணியன் | 617 |
| சித்தர்களின் உயிர்த் தத்துவம்<br>த. சண்முக வடிவு | 620 |